முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை

அசல் வழக்கு எண் – 139/2017

**வாதி தரப்பு சாட்சி–3 பசுபதி – திருமதி.எஸ்.கோமதி பெஞ்ச் கி**ளார்க் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 18.04.2026ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

1) நான் 5ம் வகுப்பு படித்துள்ளேன். எழுதப் படிக்க தெரியும். என்னை சாட்சியளிக்க வாதி அழைத்து வந்தார். இந்த வழக்கை யார், யாருக்கு எதிராக தாக்கல் செய்துள்ளனர் என்று தெரியுமா என்றால் தெரியாது. எந்த சொத்து சம்பந்தமாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால், வீடு சம்பந்தமாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மாணிக்கம் வகையறா எனக்கு உறவினர்களா என்றால் இல்லை, பழக்கமானவர்கள். எனது சாட்சிய வாக்குமூலத்தில் உள்ள விபரங்கள் தெரியுமா என்றால் தெரியும். பிரச்சினைக்குரிய வீட்டின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. விஸ்தீரணம் தெரியுமா என்றால் தெரியாது. பட்டா யார் பெயரில் உள்ளது என தெரியுமா என்றால் தெரியாது. என்னை சாட்சி கையெழுத்து போட யார் அழைத்து சென்றது என்றால் தனத்தின் தாயார் பழனியம்மாள் சாட்சி கையெழுத்து போடச்சொல்லி கேட்டார், போட்டேன்.

2) மேற்படி ஆவணத்தின் முழு விபரங்கள் பற்றி தெரியுமா என்றால் தெரியாது. என்னைத் தவர மற்றொருவர் சாட்சி கையெழுத்து போட்டார், அவர் பெயர் தெரியாது. கையெழுத்து எங்கே போட்டீர்கள் என்றால், சார் பதிவாளர் அலுவலகத்திற்கு வெளியே ஒரு கையெழுத்தும், உள்ளே ஒரு கையெழுத்தும் போட்டோம். என்னுடன் கையெழுத்து போட்ட மற்றொருவரும் சார் பதிவாளர் அலுவலகத்தில் கையெழுத்து போட்டாரா என்றால், தங்கவேல் என்பவர் போட்டார். மேற்படி ஆவணத்தில் மாணிக்கம், தனலெட்சுமி கையெழுத்து போட்டார்களா என்றால் போட்டிருப்பார்கள்.

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/–R. தமிழரசி
**Principal District Munsif,**
**Kulithalai.**